# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2333/30 - 2023 මැයි මස 26 වැනි සිකුරාදා - 2023.05.26

2333/30 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: KDS/UDP/4/IFR/48.
காணி அமைச்சின் இல.: 4-3/2/2010/FR/294.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத் தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், 1189 ஆம் இலக்க, கலுகல்ஹின்ன எனும் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகம் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்டதுமான 320040 (01) 2 ஆம் இலக்க நில உடைமை வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம் 2 ஆகக் காட்டப்பட்டுள்ளதும் மற்றும் 2.5000 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்டதுமான மஹவில வத்த எனும் காணித் துண்டின் விபரங்கள் பின்வரு மாறு :

நஷ்டஈடுகளுக்கான பரீட்சிப்புத் தினங்கள் மற்றும் நேரம் :

**01. துண்டு இல. 02**

இடம்: கம்பளை உடபலாத்த பிரதேச செயலகம்; நில உடைமை வரைபட இலக்கம்: 320040 (01) 2; நஷ்டஈடுகளுக்கான பரீட்சிப்புத் தினம்: 2023.07.19; நேரம்: மு.ப. 10.00; விஸ்தீரணம்: 2.5000 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம்

அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு உடபலாத்த பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த பிரிவு,
கம்பளை.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
2023, மே 23.

EOG 05 - 0231

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: KWDS/LND/01/ACQ/03/2014.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2014/LO/230.

காணி எடுத்தற் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1988/38 ஆம் இலக்கமும் 2016.10.14 ஆந் திகதியுமுடைய அதி விசேட வர்த்தமானியில் 1A ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் திகதியானது, 2016.11.30 எனவும்,நேரம் மு.ப. 10.00 மணி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது 2023.07.24 ஆந் திகதி எனவும் நேரம் மு.ப. 10.00 மணி எனவும் திருத்தப்படல் வேண்டும் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

சஞ்ஜீவனீ கண்டம்பி,
பிரதேச செயலாளர்,
கலவான.

2023, மே 23.

EOG 05 - 0215

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.